தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை – 06

ந.க.எண்.45454/எம்1/இ2/2023 நாள். 04.03.2025

---------

பொருள் : பள்ளிக் கல்வி – தமிழ் வளர்ச்சித் துறை – 2024 – 2025 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை அறிவிப்பு – சூன்–3 முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் – செம்மொழிநாள் விழாவாகக் கொண்டாடுதல் – பள்ளி மாணவர்களுக்கு மாவட்ட, மாநில அளவிலான கட்டுரை, பேச்சுப் போட்டிகள் நடத்துதல் – விழாவில் சிறப்புச் செய்தல் – தொடர்பாக.

பார்வை : சென்னை – 08, எழும்பூர், தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கடித நே.மு.க.எண்.ஆமொ 4/1042/2024 நாள்.19.02.2025.

---------

பார்வையில் காணும் கடிதத்தில் பின்வருமாறு தமிழ் வளர்ச்சித் துறையின் 2024 – 25ஆம் ஆண்டு மான்யக் கோரிக்கையின் போது அறிவிப்பு வெளியிடப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

"2025ஆம் ஆண்டு முதல் சூன் திங்கள் 3ஆம் நாளினை செம்மொழி நாள் விழாவாகக் கொண்டாடப்படும்".

தமிழுக்கு செம்மொழித் தகுதி பெற்றுத் தந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பெருமையைப் போற்றிடும் வகையில் அவர் பிறந்த நாளான சூன் திங்கள் 3ஆம் நாள் தமிழ்நாடு அரசின் சார்பில் ஆண்டுதோறும் செம்மொழிநாள் விழாவாகக் கொண்டாடப்படும். மேலும், செம்மொழியின் சிறப்பையும் முத்தமிழறிஞரின் தமிழ்தொண்டின் பெருமையையும் மாணவர்களிடம் உணர்த்திடும் வகையில் ஆண்டுதோறும் அனைத்து மாவட்டங்களிலும் 11 மற்றும் 12 ஆம் வகுப்பு பயிலும் பள்ளி மாணவர்களுக்கும் கல்லூரி கட்டுரை, பேச்சுப் போட்டிகள் நடத்தப்படும்.

Scanned with OKEN Scanner

இவ்வறிவிப்பு மற்றும் பார்வையில் காணும் கடிதத்திற்கிணங்க 2025 ஜூன் 3 அன்று செம்மொழி நாள் விழா தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் கொண்டாடப்படவுள்ளது. அவ்விழாவில் செம்மொழியின் சிறப்பையும் முத்தமிழறிஞரின் தமிழ்த்தொண்டின் பெருமையையும் மாணவர்களிடம் உணர்த்திடும் வகையில் 11, 12ஆம் வகுப்பு பயிலும் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களிடையே முத்தமிழறிஞர் கலைஞரின் தமிழ்த்தொண்டு, செம்மொழியின் சிறப்பு குறித்த பொருண்மைகள் சார்ந்து கட்டுரை, பேச்சுப் போட்டிகள் மாவட்ட, மாநில அளவில் நடத்தி முதல் மூன்று இடம் பெறும் மாணவர்களுக்கு பரிசுத் தொகையும் பாராட்டுச் சான்றிதழும் வழங்கிச் சிறப்பு செய்யப்படவுள்ளது. பள்ளி மாணவர்களின் பொதுத்தேர்வினைக் கருத்தில் கொண்டு கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டிகள் 09.05.2025 அன்று வெள்ளிக் கிழமை அன்று தமிழ்நாடு முழுவதிலும் அனைத்து மாவட்டங்களிலும் நடத்தப்பெறவுள்ளது.

மாவட்ட அளவிலான போட்டிகள் – பரிசுத் தொகை விவரம் (பள்ளி)

| வ. எண். | பரிசு விவரம் | கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டி தொகை | மொத்தத் தொகை (ரூ) |
|---|---|---|---|
| 1 | முதல் பரிசு | ரூ.10,000/- X 2 போட்டிகள் X 38 மாவட்டங்கள் | 7,60,000/- |
| 2 | இரண்டாம் பரிசு | ரூ.7,000/- X 2 போட்டிகள் X 38 மாவட்டங்கள் | 5,32,000/- |
| 3 | மூன்றாம் பரிசு | ரூ.5,000/- X 2 போட்டிகள் X 38 மாவட்டங்கள் | 3,80,000/- |
| | | மொத்தம் | 16,72,000/- |

17.05.2025 சனிக்கிழமை அன்று மாநிலப்போட்டி சென்னையில் நடைபெறவுள்ளது.

மாநில அளவிலான போட்டிகள் – பரிசுத் தொகை விவரம் (பள்ளி)

| வ. எண். | பரிசு விவரம் | கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டி தொகை | மொத்தத் தொகை (ரூ) |
|---|---|---|---|
| 1 | முதல் பரிசு | ரூ.15,000/- X 2 போட்டிகள் | 30,000/- |
| 2 | இரண்டாம் பரிசு | ரூ.10,000/- X 2 போட்டிகள் | 20,000/- |
| 3 | மூன்றாம் பரிசு | ரூ.7,000/- X 2 போட்டிகள் | 14,000/- |
| | | மொத்தம் | 64,000/- |

Scanned with OKEN Scanner

மாவட்டப் போட்டிகளில் கலந்து கொள்ளும் மாணவர்களின் விண்ணப்பப் படிவங்கள் 25.03.2025 ஆம் நாளுக்குள் உரிய மாவட்ட தமிழ் வளர்ச்சித் துறை துணை இயக்குநர்கள் / உதவி இயக்குநர்கள் அலுவலகங்களில் இருந்து நேரடியாகவும் தமிழ் வளர்ச்சித் துறையின் https://tamilvalarchithurai.tn.gov.in என்ற இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து விண்ணப்பப் படிவத்தினை நிறைவு செய்து தலைமையாசிரியரின் பரிந்துரையுடன் நேரில் அளிக்க வேண்டும். போட்டி தொடர்பான விண்ணப்பப் படிவம், விதிமுறைகள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

இப்போட்டி தொடர்பான விவரங்களை பள்ளிகளுக்கு தெரிவித்து மாணவர்களை போட்டியில் கலந்து கொள்ளவும் , செம்மொழி நாள் விழாவிற்கு ஒத்துழைப்பு நல்கிடவும் அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

இணைப்பு – பார்வையில் காணும் கடிதம்

பள்ளிக் கல்வி இயக்குநர்.

பெறுநர்
முதன்மைக் கல்வி அலுவலர்கள்,
அனைத்து மாவட்டங்கள்.

நகல்
முனைவர். ந. அருள்,
தமிழ் வளர்ச்சி இயக்குநர்,
தமிழ்ச் சாலை, எழும்பூர்,
சென்னை – 600 008.
(தகவலுக்காக கனிவுடன் அனுப்பலாகிறது).

Scanned with OKEN Scanner

45454/23 00770 JD(NSS)

முனைவர் ந. அருள்
தமிழ் வளர்ச்சி இயக்குநர்,
தமிழ் வளர்ச்சி இயக்ககம்,
தமிழ்ச் சாலை, எழும்பூர்,
சென்னை – 600 008.

தொ.பே. எண். நேரடி : 28190411
அலுவலகம் : 28190412
28190413
நிகரி : 28190410
மின்னஞ்சல் முகவரி:
tamilvalarchithurai@gmail.com
tvt.officiallanguage@gmail.com

56/m1

திருவள்ளுவராண்டு 2056 / மாசி – 07
நே.மு.க.எண். ஆமொ 4 / 1042 / 2024, நாள் : 19.02.2025

பெருந்தகையீர் வணக்கம்,

பொருள் : தமிழ் வளர்ச்சித் துறை – 2024–2025 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை அறிவிப்பு – சூன் 3 முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் – செம்மொழிநாள் விழாவாகக் கொண்டாடுதல் – பள்ளி மாணவர்களுக்கு மாவட்ட, மாநில அளவிலான கட்டுரை, பேச்சுப் போட்டிகள் நடத்துதல் – விழாவில் சிறப்புச் செய்தல் –தொடர்பாக.

பார்வை : 03.10.2024 ஆம் நாளிட்ட தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்(தவ1.1.) துறை, அரசாணை (நிலை) எண். 205

*****

2024–2025 ஆம் ஆண்டு தமிழ் வளர்ச்சித் துறையின் மானியக் கோரிக்கையின் போது பின்வருமாறு அறிவிப்பு வெளியிடப்பட்டது.

> **"2025ஆம் ஆண்டு முதல் சூன் திங்கள் 3ஆம் நாளினை செம்மொழி நாள் விழாவாகக் கொண்டாடப்படும்".**
>
> தமிழுக்கு செம்மொழித் தகுதி பெற்றுத் தந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பெருமையைப் போற்றிடும் வகையில் அவர் பிறந்த நாளான சூன் திங்கள் 3 ஆம் நாள் தமிழ்நாடு அரசின் சார்பில் ஆண்டுதோறும் செம்மொழிநாள் விழாவாகக் கொண்டாடப்படும். மேலும், செம்மொழியின் சிறப்பையும் முத்தமிழறிஞரின் தமிழ்த்தொண்டின் பெருமையையும் மாணவர்களிடம் உணர்த்திடும் வகையில் ஆண்டுதோறும் அனைத்து மாவட்டங்களிலும் 11 மற்றும் 12 ஆம் வகுப்பு பயிலும் பள்ளி மாணவர்களுக்கும் கல்லூரி கட்டுரை, பேச்சுப் போட்டிகள் நடத்தப்படும்.

இவ்வறிவிப்பு மற்றும் பார்வையில் காணும் அரசாணைக்கிணங்க 2025 சூன் 3 அன்று செம்மொழி நாள் விழா தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் கொண்டாடப்படவுள்ளது. அவ்விழாவில் செம்மொழியின் சிறப்பையும் முத்தமிழறிஞரின் தமிழ்த்தொண்டின் பெருமையையும் மாணவர்களிடம் உணர்த்திடும் வகையில் 11, 12ஆம் வகுப்பு பயிலும் பள்ளி மற்றும் கல்லூரி

Scanned with OKEN Scanner

மாணவர்களிடையே முத்தமிழறிஞர் கலைஞரின் தமிழ்த்தொண்டு, செம்மொழியின் சிறப்பு குறித்த பொருண்மைகள் சார்ந்து கட்டுரை, பேச்சுப் போட்டிகள் மாவட்ட, மாநில அளவில் நடத்தி முதல் மூன்று இடம் பெறும் மாணவர்களுக்கு பரிசுத் தொகையும் பாராட்டுச் சான்றிதழும் வழங்கிச் சிறப்பு செய்யப்படவுள்ளது. பள்ளி மாணவர்களின் பொதுத்தேர்வினைக் கருத்தில் கொண்டு கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டிகள் 09.05.2025 அன்று வெள்ளிக்கிழமை அன்று தமிழ்நாடு முழுவதிலும் அனைத்து மாவட்டங்களிலும் நடத்தப்பெறவுள்ளது.

<u>மாவட்ட அளவிலான போட்டிகள் – பரிசுத்தொகை விவரம் (பள்ளி)</u>

| வ.எண் | பரிசு விவரம் | கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டி தொகை | மொத்தத் தொகை (ரூ) |
|---|---|---|---|
| 1 | முதல் பரிசு | ரூ.10,000/– X 2 போட்டிகள் X 38 மாவட்டங்கள் | 7,60,000/– |
| 2 | இரண்டாம் பரிசு | ரூ.7,000/– X 2 போட்டிகள் X 38 மாவட்டங்கள் | 5,32,000/– |
| 3 | மூன்றாம் பரிசு | ரூ.5,000/– X 2 போட்டிகள் X 38 மாவட்டங்கள் | 3,80,000/– |
| | | மொத்தம் | ரூ.16,72,000/– |

17.05.2025 சனிக்கிழமை அன்று மாநிலப்போட்டி சென்னையில் நடைபெறவுள்ளது.

<u>மாநில அளவிலான போட்டிகள் – பரிசுத்தொகை விவரம் (பள்ளி)</u>

| வ.எண் | பரிசு விவரம் | கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டி தொகை | மொத்தத் தொகை (ரூ) |
|---|---|---|---|
| 1 | முதல் பரிசு | ரூ.15,000/– X 2 போட்டிகள் | 30,000/– |
| 2 | இரண்டாம் பரிசு | ரூ.10,000/– X 2 போட்டிகள் | 20,000/– |
| 3 | மூன்றாம் பரிசு | ரூ.7,000/– X 2 போட்டிகள் | 14,000/– |
| | | மொத்தம் | ரூ.64,000/– |

Scanned with OKEN Scanner

மாவட்டப் போட்டிகளில் கலந்து கொள்ளும் மாணவர்களின் விண்ணப்பப் படிவங்கள் 25.03.2025ஆம் நாளுக்குள் உரிய மாவட்ட தமிழ் வளர்ச்சித் துறை துணை இயக்குநர்கள் / உதவி இயக்குநர்கள் அலுவலகங்களில் இருந்து நேரடியாகவும் தமிழ் வளர்ச்சித் துறையின் https://tamilvalarchithurai.tn.gov.in என்ற இணைய தளத்தில் பதிவிறக்கம் செய்து விண்ணப்பப் படிவத்தினை நிறைவு செய்து தலைமையாசிரியரின் பரிந்துரையுடன் நேரில் அளிக்க வேண்டும். போட்டி தொடர்பான விண்ணப்பப் படிவம், விதிமுறைகள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

இப்போட்டி தொடர்பான விவரங்களை தங்கள் தலைமையின் கீழ் இயங்கும் அனைத்து மாவட்டப் பள்ளிகளுக்கும் தகவல் தெரிவித்து மாணவர்களை போட்டியில் கலந்து கொள்ளவும் செம்மொழி நாள் விழாவிற்கு ஒத்துழைப்பு நல்கிடவும் தங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நன்மதிப்புடன்

தங்கள் அன்புள்ள

(முனைவர் ந. அருள்)

பெறுநர்:
முனைவர் ச. கண்ணப்பன்,
இயக்குநர்,
பள்ளிக் கல்வி இயக்ககம்,
டி.பி.ஐ. வளாகம்,
கல்லூரிச் சாலை, நுங்கம்பாக்கம்,
சென்னை – 600 006.
044 – 28272088
directordge.tn@nic.in

Scanned with OKEN Scanner

1042/ஆ.மொ.4/2024

# தமிழ் வளர்ச்சித் துறை

------------------ மாவட்டம்

## செம்மொழி நாள் விழா

### 11, 12ஆம் வகுப்பு பயிலும் பள்ளி மாணவர்களுக்கான கட்டுரை / பேச்சுப் போட்டி

### பங்கேற்புப் படிவம்

(தமிழில் நிறைவு செய்ய வேண்டும்)

நிழற்படம்

இறுதி நாள் : 25.03.2025

1. மாணவரின் பெயர் தலைப்பெழுத்துடன் :
2. பிறந்த நாள் / வயது :
3. பயிலும் பள்ளி முழு முகவரி :

   தொலைபேசி எண், மின்னஞ்சல் முகவரி
4. பயிலும் வகுப்பு / பாடப்பிரிவு :
5. இல்ல முகவரி / தொலைபேசி எண் / மின்னஞ்சல் முகவரி :
6. கலந்து கொள்ளும் போட்டி :
7. மாணவரின் மாதிரி ஒப்பம் (தமிழில்) : **1.**

   **2.**

<u>பரிந்துரை</u>

இப்பள்ளியில் பயிலும் மாணவன் / மாணவி --------------------- தமிழ் வளர்ச்சித் துறையால் நடத்தப்படும் ------------ போட்டியில் ------- அன்று கலந்துக் கொள்ள பரிந்துரைக்கிறேன்.

பள்ளித் தலைமையாசிரியர் ஒப்பம்

அலுவலக முத்திரை

நாள் :

போட்டி நடைபெறும் நாளன்று மாணவரின் ஒப்பம் ------------

Scanned with OKEN Scanner

1042/ஆ.மொ.4/2024

## செம்மொழி நாள் விழா

**பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கான கட்டுரை / பேச்சுப் போட்டிக்கான விதி முறைகள்**

1. போட்டியில் கலந்து கொள்ளும் மாணவர்கள் அந்தந்த கல்லூரிக்குரிய மாவட்டங்களில் மட்டுமே கலந்து கொள்ள வேண்டும்.
2. கலந்து கொள்ளும் மாணவர்கள் போட்டி நாளன்று முற்பகல் 09.00 மணிக்குள் தங்கள் வருகையைப் பதிவு செய்திடல் வேண்டும்.
3. போட்டியில் பேசுவதற்கு ஒருவருக்கு 3 நிமிடங்கள் மட்டுமே அளிக்கப்படும்.
4. வெற்றி பெற்றவர்களைத் தெரிவு செய்தல் நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.
5. தலைப்புகள் முத்தமிழறிஞர் கலைஞரின் தமிழ்த் தொண்டு, செம்மொழியின் சிறப்பு இப்பொருண்மை சார்ந்தே போட்டியின் போது அறிவிக்கப்படும்.
6. இப்போட்டியில் கலந்து கொள்ளும் மாணவர்கள் பங்கேற்புப் படிவத்தை நிறைவு செய்து கல்லூரி முதல்வர் / பள்ளி தலைமையாசிரியர் பரிந்துரையுடன் போட்டி தொடங்கும் முன்பு தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர் / உதவி இயக்குநர்களிடம் அளிக்கப்பட வேண்டும். பங்கேற்புப் படிவம் இல்லாத மாணவர்கள் போட்டியில் கலந்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார்கள்.
7. 09.30 மணிக்கு மேல் வருகை தரும் மாணவர்கள் போட்டியில் பங்கேற்க அனுமதிக்கப்பட மாட்டார்கள்.
8. மாவட்டப் போட்டியில் வெற்றிபெறும் மாணவர்களுக்கு முதல் பரிசாக ரூ.10,000/-, இரண்டாம் பரிசாக ரூ.7000/-, மூன்றாம் பரிசாக ரூ.5000/- வழங்கப்பெறும்.
9. போட்டி உரிய நாளில் நடத்தப் பெற்று முடிவுகள் அன்றே அறிவிக்கப்படும்.
10. போட்டியில் கலந்து கொள்ளும் மாணவர்களுக்குப் பயணப்படி ஏதும் வழங்கப்படமாட்டாது.
11. போட்டியில் கலந்து கொள்ளும் மாணவர்களுக்கு தேநீர், மாச்சில், மதிய உணவு, பங்கேற்புச் சான்றிதழ் வழங்கப்பெறும்.
12. மாவட்டப் போட்டியில் முதல் பரிசு பெறும் மாணவர்கள் 17.05.2025 அன்று சென்னையில் நடைபெறும் மாநிலப் போட்டியில் கலந்து கொள்ளும் வாய்ப்பினைப் பெறுவர்.
13. மாவட்டப் போட்டியில் கலந்து கொண்டு முதலிடம் பெறும் மாணவர்கள் அடுத்த ஆண்டு நடைபெறும் இப்போட்டியில் கலந்து கொள்ள இயலாது.
14. ஒரு போட்டிக்கு ஒரு மாணவர் வீதம் 2 போட்டிகளுக்கு 2 மாணவர்கள் மட்டுமே கலந்து கொள்ள இயலும்.

தமிழ் வளர்ச்சி இயக்குநர்

Scanned with OKEN Scanner